**சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.**

**OS No: 110/2011** **தேதி: 24.03.2026**

**வா.சா.2 – கணேசன்**

**<u>முதல் விசாரணை தொடர்ச்சி</u>**

நான் அருப்புக்கோட்டை டவுண், நல்லூர் முஸ்லீம் நடுத்தெரு சம்பந்தப்பட்ட டவுண் ரிஜிஸ்டரை கொண்டு வந்துள்ளேன். வா.சா.ஆ 29 ஆவணம் எங்கள் அலுவலகத்தில் இணைய வழியில் பதிவேற்றம் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் வார்டு ஏ, பிளாக் நம்பர் 16, டவுண் சர்வே எண்.39/1 அது சம்பந்தப்பட்டது. அடங்கல் படி அப்பாஸ் ராவுத்தர் மகன் அப்துல்ராசக் என்பவர் பெயரில் பட்டா உள்ளது. எங்களது டவுண் ரிஜிஸ்டரில் மேற்படி இடம் என்ன பயன்பாடாக உள்ளது என்றால் காரை வீடும், காலி இடமும் என்று உள்ளது. எவ்வகை பயன்பாடு என்பது குறித்து இணைய வழியில் பதிவேற்றம் செய்யமுடியாததால் 0 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. டிஎஸ் நம்பர் 39/2 முதல் 39/6 வரை அடங்கலில் பட்டா அப்துல்ராசக் என்பவர் பெயரில் உள்ளது. எவ்வகை பயன்பாடு என்பதில் இணைய வழியில் வியாபாரம் என்றும், எங்கள் அலுவலக கோப்பில் கடை, காரை வீடு என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. டிஎஸ் நம்பர் 39/2 என்பது கடை என்று உள்ளது. 39/3 முதல் 39/6 வரை காரை வீடு, கடை என்று உள்ளது. டிஎஸ் நம்பர் 39/1 காலி இடம், காரை வீடு என்று உள்ளது. எங்களது ஆவணத்தின் படி யார் அனுபவம் செய்து வருகிறார்கள் என்று எனக்கு தெரியாது. மேற்படி டிஎஸ் நம்பருக்கு நாங்கள் இணைய வழியில் பதிவேற்றம் செய்தது சரியான தகவல் தான். டிஎஸ் எண். 39/1 முதல் 39/6 வரை

உள்ள டவுண் சர்வே ரிஜிஸ்டரின் உண்மை நகலை தாக்கல் செய்கிறேன். அது **சா.சா.ஆ 2**. ( ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது. )

**<u>1, 6, 9, 10 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

என்னிடம் காட்டப்படும் ஆவணம் எங்கள் அலுவலகத்தால் வழங்கப்பட்டது. ஆனால் நில அளவையர் துறையால் வழங்கப்படவில்லை. வா.சா.ஆ 29 ஆவணம் செட்டில்மெண்ட் தாசில்தாரால் வழங்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் டவுண் சர்வேயர் என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். எங்களுக்கு நகராட்சியில் இருந்து கொடுக்கப்படும் சொத்து வரி சம்பந்தப்பட்ட விபரங்கள் எதுவும் தெரியாது என்றால் சரிதான்.

**<u>2, 8 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் அருப்புக்கோட்டை நகர நில அளவையராக 01.03.2026 முதல் பணியில் இருந்து வருகிறேன். எனக்கு சாட்சி சம்மன் அருப்புக்கோட்டை நகராட்சி ஆணையர் மூலமாக சார்பு செய்யப்பட்டது. அருப்புக்கோட்டை நகராட்சி ஆணையர் என்னை சாட்சியம் அளிக்க அனுமதி அளித்த கடிதமோ, உத்தரவோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு இந்த விபரப்படி சாட்சியம் அளிக்க வேண்டும் என்று அருப்புக்கோட்டை நகராட்சி ஆணையர் உத்தரவு எதுவும் பிறப்பிக்கவில்லை. அருப்புக்கோட்டை நகர எல்லைக்குள் தெரு பெயர், கதவு எண் மட்டும் குறிப்பிட்டு வார்டு எண், பிளாக், டவுண் சர்வே எண் குறிப்பிடாமல் ஒரு சொத்து பற்றிய வரி விதிப்பு குறிப்புகள் பற்றி என்னால் கூற முடியாது என்றால் சரிதான். எனக்கு இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க டவுண் சர்வே எண், வார்டு எண், பிளாக் எண் குறித்து எந்த

தகவலும் வரவில்லை என்று சொன்னால் சரிதான். ஆனால் டவுண் ரிஜிஸ்டர் கொண்டு வரச்சொல்லப்பட்டிருந்தது. எனக்கு என்று தனியாக டவுண் ரிஜிஸ்டரை கொண்டு வரச்சொல்லி உத்தரவு பிறப்பிக்கப்பட்டதா என்றால் ஆணையர் அழைப்பாணையில் கண்ட ஆவணங்களை கொண்டு போகச் சொன்னார். எனக்கு வந்த அழைப்பாணையில் தாவா சொத்துக்கள் சம்பந்தமான டவுண் சர்வே ரிஜிஸ்டர் கொண்டு வரச்சொல்லி அதற்கு அடியில் சொத்து விபர பகுதியில் 16 லக்க கதவு எண்கள் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் நல்லூர் முஸ்லீம் வடக்கு தெரு சம்பந்தமான டவுண் சர்வே ரிஜிஸ்டர், முஸ்லீம் நடுத்தெரு சம்பந்தமான டவுண் சர்வே ரிஜிஸ்டர் கொண்டுவரச் சொல்லப்பட்டிருந்தது. பொதுவாக நகராட்சி டவுண் சர்வே ரிஜிஸ்டர் ஆவணங்களை பொது மக்கள் பெறவேண்டும் என்றால் உரிய மனு செய்து அதன் நகல்களை பெறலாம் என்றால் சரிதான். சா.சா.ஆ 1 ஆவணம் அழைப்பாணையில் கோரப்படவில்லை என்றால் சரிதான். ஆனால் முஸ்லீம் வடக்கு தெரு, டோர் நம்பர் 1 முதல் 15 வரையான டவுண் சர்வே ரிஜிஸ்டர் கொண்டு வரச்சொல்லப்பட்டிருந்தது. அழைப்பாணையில் கோராத ஆவணங்களை நான் தாக்கல் செய்தது ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.